Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2021-23

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்
# La Gazette de L' État de Poudouchéry
# The Gazette of Puducherry

**PART - I**

**சிறப்பு வெளியீடு** **EXTRAORDINAIRE** **EXTRAORDINARY**

அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **செவ்வாய்க்கிழமை** | **2022 ஆம்** | **சூலை மீ** | **5 வ** |
| **No.** | **75** | **Poudouchéry** | **Mardi** | **5** | **Juillet** | **2022 (14 Asadha 1944)** |
| **No.** | | **Puducherry** | **Tuesday** | **5th** | **July** | **2022** |

புதுச்சேரி அரசு

**தேர்தல் துறை**

*எண் தே. 135(1)/2022.*

*புதுச்சேரி, 2022-ஆம் ஆண்டு சூலை மாதம் 05-ஆம் தேதி.*

கீழ்காணும் அறிவிக்கைகள் பொதுமக்கள் தகவலுக்காக மீண்டும் வெளியிடப்படுகின்றன:

(1) புதுதில்லி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 2022-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் தேதியிட்ட 480/2022 எண்ணுள்ள அறிவிப்பு:

(2) புதுதில்லி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 2022-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் தேதியிட்ட 480/2022 (1) எண்ணுள்ள அறிவிப்பு:

**ல. குமார்,** இ.ஆ.ப.,
தலைமைத் தேர்தல் அதிகாரி.

## இந்தியத் தேர்தல் ஆணையம்

*நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110 001,*
*2022-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் தேதி/*
*ஆசாத மாதம், 14-ஆம் தேதி, 1944 (சக).*

அறிவிக்கை

எண் 480/2022– இந்திய குடியரசுத் துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு அவர்களின் பதவிக்காலம் அரசியலமைப்புச் சட்டம் பிரிவுக்கூறு 67-ன் படி, 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதி முடிவடைய இருப்பதாலும்;

ஆகையால், தற்போதைய குடியரசுத் துணைத் தலைவரின் பதவிக்காலம் முடிவடைவதால் ஏற்படும் காலியிடத்தை நிரப்புவதற்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 68-ஆவது பிரிவின்படி சட்ட விதிக்கூறு (1)-ன்படி, அவரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக தேர்தலை நடத்தவேண்டியிருப்பதாலும்; மற்றும்

குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல்கள் சட்டம், 1952-ன் (31/1952) 4-ஆவது பிரிவின் (3)-ஆவது உட்பிரிவிற்கிணங்க, இந்திய குடியரசுத் துணைத் தலைவர் பதவியை நிரப்புவதற்கான தேர்தலுக்காக, அத்தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற குடியரசுத் துணைத் தலைவர் 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ஆம் தேதியன்று பதவியை ஏற்க ஏதுவாக அத்தேர்தலை உரிய காலத்தில் நடத்தி முடிக்கும் வகையில் தேர்தல் தேதிகளாக இந்தியத் தேர்தல் ஆணையம் நிர்ணயிக்க வேண்டியிருப்பதாலும்;

ஆகவே, இந்தியத் தேர்தல் ஆணையம் இதனால் குறிப்பிடுகின்றது-

(அ) அரசியலமைப்புச் சட்டம் பிரிவுக் கூறு 66-இல் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர் குழு தற்போதைய குடியரசுத் துணைத் தலைவரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக ஏற்படும் காலியிடத்தை நிரப்புவதற்கு தேர்வு செய்யும் பொருட்டு, அரசியலமைப்பு விதிகளின்படியும், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசு துணைத் தலைவர் தேர்தல்கள் சட்டம், 1952 (31/1952)-ன் கீழ் விதிகள் மற்றும் ஆணைகளின்படி அழைப்பு விடுக்கிறது; மற்றும்

(ஆ) மேற்படி சட்டத்தின் 4-ஆவது பிரிவில் கண்ட (1)-ன் உட்பிரிவினையொட்டி நிர்ணயித்துள்ளது-

| | | | |
|---|---|---|---|
| (அ) | வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் | : | 19 சூலை, 2022 (செவ்வாய்க்கிழமை) |
| (ஆ) | வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யும் நாள் | : | 20 சூலை, 2022 (புதன்கிழமை) |
| (இ) | வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் | : | 22 சூலை, 2022 (வெள்ளிக்கிழமை) |
| (ஈ) | வாக்குப் பதிவு நாள், தேவைப்படின் | : | 6 ஆகஸ்ட், 2022 (சனிக்கிழமை) |

(ஆணைப்படி)

**நரேந்திர N. பூடோலியா,**
மூத்த முதன்மை செயலர்.

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

*நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110 001,*
*2022-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் தேதி/*
*ஆசாத மாதம், 14-ஆம் தேதி, 1944 (சக).*

அறிவிக்கை

எண் 480/2022(1)– 1974-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் விதிகளின் 8-ஆவது விதியின்படி குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்கான தேர்தல் ஆணையம்:

(1) 2022-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் தேதியிட்ட 480/2022 எண்ணுள்ள குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் அறிவிப்பில் கண்டுள்ளபடி, புதுதில்லி நாடாளுமன்ற இல்லத்தின் அறை எண் 63-ஐ வாக்கெடுப்பு நடக்கும் இடமாக நிர்ணயித்துள்ளது.

(2) மேற்கண்ட இடத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை உள்ள நேரங்களை, தேவையிருப்பின், வாக்குப்பதிவு நடக்கும் நேரங்களாக குறிப்பிடுகின்றது.

(ஆணைப்படி)

**நரேந்திர N. பூடோலியா,**
மூத்த முதன்மை செயலர்.

---

GOVERNMENT OF PUDUCHERRY

**ELECTIONS DEPARTMENT**

*No. E. 135(1)/2022*

*Puducherry, the 05th July 2022.*

The following notifications of the Election Commission of India are republished for the information of general public.

| Notification No. and date | Relating to |
|---|---|
| (1) | (2) |
| (i) 480/2022, dated 5-7-2022 | Vice-Presidential Election, 2022-Schedule of Election. |
| (ii) 480/2022 (1), dated 5-7-2022 | Vice-Presidential Election, 2022-Place and time of poll. |

**L. KUMAR,** I.A.S.,
Chief Electoral Officer.

---

**ELECTION COMMISSION OF INDIA**

*Nirvachan Sadan, Ashoka Road, New Delhi-110 001,*
*Dated the 05th July 2022 / Asadha 14, 1944 (Saka).*

NOTIFICATION

No. 480/2022- Whereas, the term of office of Shri M. Venkaiah Naidu, Vice-President of India, is up to 10th day of August, 2022, in terms of Article 67 of the Constitution; and

Whereas, an election is due to be held, in terms of clause (1) of Article 68 of the Constitution, to fill the vacancy to be caused by the expiration of the term of office of the incumbent Vice-President before the expiration of term of his office; and

Whereas, under sub-section (3) of section 4 of the Presidential and Vice-Presidential Elections Act, 1952 (31 of 1952), the Election Commission of India is required to so appoint the dates for the election to fill the office of the Vice-President of India that the election will be completed at such time as will enable the Vice-President thereby elected to enter upon his office on the 11th day of August, 2022;

Now, therefore, the Election Commission of India hereby–

(A) calls upon the Electoral College, referred to in Article 66 of the Constitution, to elect a person to fill the above vacancy in the Office of Vice-President of India before the expiration of the term of the incumbent Vice-President, in accordance with the provisions of the Constitution, the Presidential and Vice-Presidential Elections Act, 1952 (31 of 1952), and the Rules and Orders made thereunder; and

(B) in pursuance of sub-section (1) of section 4 of the said Act, appoints–

(a) the 19th July, 2022 (Tuesday), as the last date for making nominations;

(b) the 20th July, 2022 (Wednesday), as the date for scrutiny of the nominations;

(c) the 22nd July, 2022 (Friday), as the last date for the withdrawal of candidatures; and

(d) the 6th August, 2022 (Saturday), as the date on which a poll shall, if necessary, be taken.

(By order)

NARENDRA N. BUTOLIA,
Senior Principal Secretary.

**ELECTION COMMISSION OF INDIA**

*Nirvachan Sadan, Ashoka Road, New Delhi-110 001,*
*Dated the 05th July 2022 / Asadha 14, 1944 (Saka).*

NOTIFICATION

No.480/2022 (l)– In pursuance of rule 8 of the Presidential and Vice-Presidential Elections Rules, 1974, the Election Commission of India hereby;

(a) fixes Room No. 63, Parliament House, New Delhi as the place of polling for the Vice-President Election to be held in accordance with its Notification No.480/2022, dated the 05th July, 2022; and

(b) specifies the hours from 10.00 a.m. to 5.00 p.m. both inclusive to be the hours during which the poll, if necessary, will be taken at the said place of polling.

(By order)

NARENDRA N. BUTOLIA,
Senior Principal Secretary.

---

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* the Director, Government Press, Puducherry.